RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s22235

# சிலப்பதிகாரத்தில் வருணப்பாகுபாடு

நா. சிவகுரு [அ, *]

[அ] தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்-632115, தமிழ்நாடு, இந்தியா

# Discrimination in Silapathikaram

**N. Sivaguru** [a, *]

[a] Department of Tamil, Thiruvalluvar University, Vellore-632115, Tamil Nadu, India

* Corresponding Author:
arasi162010@gmail.com

Received: 02-09-2022
Revised: 27-10-2022
Accepted: 17-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Silapathikaram is considered the best epic in Tamil literature. This epic is about the three kings who has been called Moovaendars and the three modes of entertainment such as literature, music and drama. The ancient people's life style, social structure, standard of living of the people, caste discrimination, and folk song system have been highlighted in this text. Varuna (division of people based on caste) plays a major role in people's lives. Author IIangovadigal points out that this situation came from Silapathikaram period. The people are divided into four categories as priests, kings, merchants and servants. Though the text speaks well about merchants, it gave importance to priests. The protagonist Kovalan is highlighted in the text through the priests. Through this, we can feel their primacy in the society. Even though the kings and servants have material possessions, they are next to the Antananars (priests). In Silapathikaram, you can see a society where caste discrimination is established. It is not known whether this was the case at that time or whether the Ilangovadigal was trying to record such racial discrimination. Thus, the purpose of this article is to highlight the caste discrimination in Silapathikaram

**Keywords:** Silapathikaram, Ilangovadigal, Caste Discrimination, Tamil Literature

## முன்னுரை

தமிழ்க்காப்பியங்களில் முதன்மையானதாக அமைந்துள்ள காப்பியம் சிலப்பதிகாரம். தமிழ் பெருங்காப்பியங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. மூவேந்தர்களுக்கும் உரியது, இயல், இசை, நாடகம் என்ற மூன்றும் இதில் பயின்று வந்துள்ளது. அக்கால மக்களின் வாழ்க்கை முறை, சமுதாய அமைப்பு, மக்களின் வாழ்க்கைத்தரம், வருணப்பாகுபாடு, நாட்டுப்புறப்பாடல் அமைப்பு, ஆகியன எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. மக்களின் வாழ்வில் வருணம் பெரும் பங்கு வகிக்கின்றது. இந்நிலை சிலப்பதிகார காலத்தில் இருந்து வந்ததை இளங்கோவடிகள் எடுத்துக்காட்டுகின்றார். சமுதாயத்தில் இருந்து வந்த நால்வகை வருணப்பாகுபாடு. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற இப்பாகுபாடு மிகவும் நன்றாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. வணிகர்களுக்கு முதன்மை கொடுத்து எழுதப்பட்டாலும் அதில் முதன்மைவகிப்பது அந்தணர்களே ஆவர். அவர்களே கதைத் தலைமைப் பாத்திரமாக உள்ள கோவலனின் சிறப்புகளை எடுத்துக் கூறுவதாக இளங்கோவடிகள் அமைத்துள்ளார். இதன் மூலம் சமூகத்தில் அவர்களின் முதன்மையை உணரலாம். அரசர்களும், வணகர்களும் பொருள் வைத்து இருந்தாலும் அந்தணர்களுக்கு அடுத்த நிலையில் உள்ளனர். நாலாம் வருணத்தில் உள்ளவர்கள் கடையனுக்கும் கடையனாக உள்ளனர் என்பதை இளங்கோவடிகள் பதிவு செய்கின்றார். சிலப்பதிகாரத்தில் வருணப்பாகுபாடு நிலைபெற்றுள்ள சமுதாயத்தினைக்காணமுடிகின்றது. இந்நிலை

அக்காலகட்டத்தில் இருந்ததா அல்லது இளங்கோவடிகள் அவ்வருணப்பாகுபாட்டை பதிவுசெய்ய முயலுகின்றாரா என்பது அறியமுடியவில்லை. இவ்வாறு சிலப்பாதிகாரத்தில் காணலாகும் வருணப்பாகுபாட்டை எடுத்துக்கூறுவதே இக்காட்டுரையின் நோக்கம் ஆகும். இக்கட்டுரையில் சிலப்பதிகாரத்தில் காணலாகும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் பற்றியச் செய்திகள் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன.

## அந்தணர்

அந்தணர்கள் சமூகத்தில் முதன்மை பெற்று இருந்தனர். அனைத்து நிகழ்விலும் அவர்கள் முன்நின்று நடத்தி வந்துள்ளதை சிலப்பதிகாரம் நமக்கு உணர்த்துகின்றது. திருமணச்சடங்காக இருந்தாலும், கடிதப்போக்குவரத்தாக இருந்தாலும், வணிகர்கள் ஊர் விட்டு ஊர் பயணிப்பவர்கள் அவர்களே கடிதப்போக்குவரத்திற்கு அந்தணர்களைப் பயன்படுத்தி இருக்கிறார்கள் எனில் அந்தணர்கள் அவர்களை விட அதிக பயணம் மேற்கொண்ட நிலையை உணரமுடிகின்றது.

சிலப்பதிகாரத்தில் கோவலன் - கண்ணகி திருமணத்தில் அந்தணர் இருந்தனர் என்பதை இளங்கோவடிகள் எடுத்துக்காட்டுகின்றார். அவர்கள் முன்னிலையில் தான் திருமணம் நடைபெற்றது.

இதனை,

“நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க் கீழ்

வான்ஊர் மதியம் சகடுஅணைய வானத்துச்

சாலி ஒருமீன தகையாளைக் கோவலன்

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்

தீவலம் செய்வது காண்பார்கண் நோன்புஎன்னை?” (சிலம்பு. மங்கல வாழ்த்து 49-53)

என்ற வழி உணரலாம். இதில் பார்ப்பான் மறை வழி காட்ட திருமணம் நடைபெற்றது என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார் (Natarajan, 2015).

மேலும் அந்தணர்கள் வேதம் ஓதுதலிலும் வேள்வி செய்வதிலும் தங்கள் வாழ்வினை இணைத்துக்கொண்டுள்ளனர் என்பதை இளங்கோவடிகள் எடுத்துக்காட்டுகின்றார்.

இதனை,

“மறையோர் ஆக்கிய ஆவுதி நறும்புகை

இறையுயர் மாடம் எங்கணும் போர்த்து” (சிலம்பு. நாடுகாண்காதை 144-145)

என்பதால் அறியலாம் (Gurunathan, 2004).

அந்தணர்கள் வேள்வி செய்வதை முக்கியமாக க் கருதி செய்து வந்துள்ளனர். இதனை,

“நான் மறை மருங்கின் வேள்விப் பார்ப்பான்

அருமறை மருங்கின் அரசர்க்கு ஓங்கிய

பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்” (சிலம்பு. நடுகற்காதை. 176-178)

என்பதால் அறியலாம் (Panchangam, 1993).

மேலும் கண்ணகி, கோவலன் தன்னைப் பிரிந்து இருந்த பொழுது தன்னால் அந்தணர்களையும் அறவோர்களையும் காக் க முடியவில்லை என்று வருந்திக் கூறுகின்றாள். இதனை,

“அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்

துறவோர்க்கு எதிர்த்தலும் தொல்லோர் சிறப்பின்” (சிலம்பு. கொலைக் களக் காதை. 71-72)

என்ற வழி உணரலாம். மேலும் மதுரையை எறியூட்டும் பொழுது,

"பார்ப்பார் அறவோர் பசுப் பத்தினிப்பெண்டிர்

மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டுத்

தீத்திறத்தார்ப் பக்கமே சேர்க" (சிலம்பு. வஞ்சினமாலை. 53-55)

என்பதால் உணரலாம்இதன் மூலம் சமுதாயத்தில் அந்தணர்களின் பங்கு உணர்த்தப் படுகின்றது.

## அரசர்

அந்தணர்களுக்கு அடுத்த நிலையில் இருந்தவர்கள் அரசர்கள். சேர, சோழ, பாண்டிய நாடுகளை ஆண்ட அரச குடிகளை அரசர் என்ற வகையில் வகைப்படுத்தலாம். அந்தணர்களுக்கு அடுத்த நிலையில் அரசர்கள் இருந்தனர் என்பதைப் பாண்டிய அரசன் ஒருவன் வார்த்திகன் எனும் பார்ப்பான் காலில் விழுந்து வணங்குவதாக இளங்கோவடிகள் குறிப்பதால் அறியலாம். இதனை,

"கார்த்திகை கணவன் வார்த்திகன் முன்னர்

இருநிலமடந்தைக்குத் திருமார்பு நல்கி அவள்

தணியா வேட்கையும் சிறிது தணித்தனனே" (சிலம்பு.கட்டுரைக்காதை 12-122)

என்பதால் உணரலாம் (Gurunathan, 2004).

சிலம்பில் வரும் அரசர்கள் வேள்வி செய்ய அந்தணர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பாண்டிய மன்னம இறந்த பின் மதுராபுரி தெய்வம் கண்ணகியைப் பின்தொடர்ந்து வந்து பாண்டிய மன்னன் மறையோதும் நாவின் ஓசையல்லது ஆராய்ச்சி மணியின் ஓசையைக் கேட்டது கிடையாது என்று எடுத்துக்கூறுகின்றது.

இதனை,

"தீதுற வந்த வினை காதில்

மறைநா ஓசைஅல்லது யாவதும்

மணிநாஓசை கேட்டதும் இலனே" (சிலம்பு. கட்டுரைக்காதை 30-32)

என்ற வழி உணரலாம். அரசர்கள் வேத நெறியைப்பின்பற்றி வாழ்ந்து வந்தனர். அதற்கு அந்தணர்கள் துணை நின்றுள்ளனர் என்பது புலனாகின்றது. மாடலன் சேரன் செங்குட்டுவனிடம் வேள்வி நீ செய்ய வேண்டும் என்று கூறுகின்றான் (Panchangam, 1993).

இதனை,

"நான்மறை மருங்கின் வேள்விப்பார்ப்பான்

அருமறை மருங்கின் அரசர்க்கு ஓங்கிய

பெருநல் வேள்வி நீ செயல் வேண்டும்" (சிலம்பு. நடுகற்காதை 176-178)

என்பதால் அறியலாம்

செங்குட்டுவன் அவ்வாறு கேட்கவும் அனுமதி அளிக்கின்றான். இதனை,

"நான்மறை மரபின் நயந்தெரி நாவின்

கேள்வி முடித்த வேள்வி மாக்களை

மாடலமறையோன் சொல்லிய முறைமையின்

வேள்விச் சாந்தியின் வழாக்கொளஏவி" (சிலம்பு. நடுகற்காதை 191-194)

என்பதால் அறியலாம் (Natarajan, 2015).

## வணிகர்

அரசர்களுக்குப் பின் இருப்பவர்கள் வணிகர்கள். இவர்கள் மன்னர் பின்னோர் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். வணிகர் திருமணம் அவர்களுக்குள்ளேயே நடைபெறும் பிறருடன் நடைபெறாது. கோவலன் மதுரையில் இருக்கின்ற பொழுது பெருவணிகர்கள் தாம் உண்ணும் பொழுது செய்ய வேண்டிய செயல்களை அரிய மறைகளில் கூறியவாறு செய்து முடித்து அதன் பின் உணவு உண்டான்.

இதனை,

"அரசர் பின்னோர்க்கு அருமறை மருங்கின்

உரியவெல்லாம் ஒருமுறை கழித்து" (சிலம்பு. கொலைக்களக்காதை 44-45)

எனபதால் உணரலாம்.

வணிகர் தங்கள் இனத்தவர் வேறு ஊரினராக இருந்தாலும் அவர்களுடன் ஒன்றுபட்டு சேர்த்துக் கொள்வர் என்று கவுந்தி அடிகளும் மாடலமறையோனும் கோவனிடம் கூறுகின்றனர். இதனை,

"அறத்துஉறைமாக்கட்கு அல்லர் இந்தப்

புறச்சிறை இருக்கை பொருந்தாது ஆகலின்

அரைசர் பின்னோர் அகநகர் மருங்கின் நின்

உரையிற் கொள்வர் இங்கு ஒழிக நின் இருப்பு

காதலி தன்னொடு கதிர் செல்வதன் முன்

மாடமதுரை மாநகர் புகுக" (சிலம்பு அடைக்கலக்காதை 107-112)

என்பதால் அறியலாம் (Natarajan, 2015).

## நான்காம் வருணம்

சிலப்பதிகாரத்தில் நான்காம் வருணம் என்பது பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை. வேளாளர்களைப் பற்றி சில இடங்களில் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. அந்தணர், அரசர், வணிகர் இம் மூவரைத்தவிர ஏனையோர் அனைவரும் நான்காம் வருணத்தினர் என்று கருதப்பட்டிருக்கலாம். வேளாளர்களைப்பற்றி

"பரப்பு நீர்க் காவிரிப் பாவை தன்புதல்வர்

இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்

உழவிடை விளைப்போர் பழவிறல் ஊர்களும்" (சிலம்பு நாடுகாண் காதை 147-150)

என்பதால் அறியலாம். ஆனால் நான்காம் வருணமாக இவர்களைக் குறிப்பிடவில்லை.

மேலும் வருண பூதங்களைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது வருணப்பாகுபாட்டினை மிகத்தெளிவாக எடுத்துக்கூறுகின்றார் இளங்கோவடிகள். பார்ப்பன்பூதம் வெண்ணிறம், அரசபூதம் செந்நிறம் வாணிகபூதம் பொன்னிறம், வேளாண்பூதம் கருநிறம் என்று குறிப்பிடுகின்றார். மேலும் பார்ப்பன பூதம் வேள்விக்கருவி கொண்டும் அரசபூதம் முரசு, வெண்குடை, கவரி, நெடுங்கொடி, அங்குசம், வடிவேல் ஆகியவற்றுடனும் வணிக பூதம் நாஞ்சில் துலாம் கொண்டு காணப்படுகின்றது என்று விளக்குகின்றார் இளங்கோவடிகள். ஆனால் வேளான் பூதத்திற்கு நிறம் குறிப்பிடப்பட்டுள்தே தவிர வேறு எதுவும் குறிக்கப்படவில்லை.

## முடிவுரை

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற வருணப்பாகுபாடு தொல்காப்பியர் கூறிய வகைப்பாட்டின் அடிப்டையில் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது. அந்தணர்கள் சமூகத்தில் முதன்மைபெற்று விளங்கி உள்ளனர். மறைஓதுவதும் வேள்வி செய்வதும் அவர்களது தொழிலாக உள்ளது. மேலும் கடிதங்களைக் கொண்டு சேர்க்கும் முக்கியப்பணியைச்செய்பவர்களாக அவர்கள் விளங்கி உள்ளனர். முக்கிய பாத்திரமாக உள்ள கோவலனின் பெருமைகளை எடுத்துக்கூற அந்தணர்களைப்பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது. அரசர்களை வேள்வி செய்ய அந்தணர்கள் ஊக்குவித்த தன்மையைக் காணமுடிகின்றது. அரசர்கள் வேத முறையைப்பின்பற்றி வந்த நிலையை காணமுடிகின்றது. வணிகர்கள் சமூகத்தில் உயர்ந்த இடம் பெற்றிருந்தாலும் அரசர்களுக்குப்பின் தான் வைக்கப்பட்டுள்ள தன்மை புலனாகின்றது. வணிகர்கள் தங்கள் இனத்தவர் வேறு ஊரினராக இருந்தாலும் அவர்களுக்கு உதவ முன்வருவதை கோவலன் வரலாறு உணர்த்துகின்றது. வணிகர்கள் உணவருந்துவதற்கு முன் அந்தணர்களுக்கு அளித்து அதன் பின் அவர்கள் உண்டனர் இதனை கோவலன் மதுரைக்காண்டத்தில் செய்வதாக இளங்கோவடிகள் காட்டுகின்றார். வேளாளர்களைப்பற்றிகுறிப்பு உள்ளதே தவிர வருணப்பாகுபாட்டில் அவர்களை சேர்த்து இளங்கோவடிகள் காட்டவில்லை. அந்தணர், அரசர், வணிகர் என்ற மூன்றினை மட்டும் வைத்துக்கொண்டு மற்ற அனைவரையும் நான்காம் வருணத்தில் வைத்துள்ளார் என்று எண்ண வேண்டி உள்ளது.

## References

Natarajan, T.S. (2015) SIlpathikaram Rereading, New Century book house, Chennai, India

Gurunathan, R. (2004) Silapathikaram, Palaniyappa brothers, Chennai, India

Panchangam, K. (1993) A look at the reviews on Silapathikaram, Annam pathippagam, Sivagangai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License